


Dr. S. தன்வந்திரி கார்த்திக்வேல்

# தன்வந்திரி ஆயுர்வேத வைத்தியசாலை



அரசு பதிவு பெற்ற மருத்துவமனை

HOSPITAL Regn. No. : MADUAYU20210028270 ◆ ISO 9001 : 2015 CERTIFIED HOSPITAL

இங்கு தங்கி சிறப்பு சிகிச்சை பெறுபவர்களுக்கு மருத்துவ காப்பீடு வசதி உண்டு

**மதுரை தெப்பக்குளம்:**
அனுக்கிரஹா இல்லம், கண்ணன் டிபார்ட்மெண்ட்ல் ஸ்டோர் எதிர்புறம்,
அன்னை சந்திரமதி கல்யாண மஹால் அருகில், பங்கஜம் காலனி,
தெப்பக்குளம், மதுரை - 625 009 அலைபேசி: 93601 32500

**சென்னை:**
16/25, சந்தானகிருஷ்ணன் தெரு, நேரு நகர், அஸ்தினாபுரம் ரோடு,
MIT front கேட் அருகில், குரோம்பேட்டை, சென்னை - 600 044 அலைபேசி: 75024 99666

**இராமநாதபுரம் கிளை:**
NO 9, RR சேதுபதி நகர். காவல் நிலையம் பின்புறம். இராமநாதபுரம்.
அலைபேசி: 9944167183. 9360132498

**41/130-A, பாலாஜி தெரு, அழகப்பன் நகர், மதுரை 625 003.**

Email: drkarthic@gmail.com web: www.drkdhanvanthriclinic.com

Ph: 0452-2692647 mobile: 87604 44404, 73731 166111, 80980 01791



தலைமை மருத்துவர் :
Dr. S. தன்வந்திரி கார்த்திக்வேல்
B.A.M.S., MD., FICA., PG Geriatrics

# முருகனின் ஆறுபடைவீடுகளும் சிறப்புகளும்



## முதல்படைவீடு திருப்பரங்குன்றம்

கயிலாயத்தில் சிவபெருமான், பார்வதி தேவிக்கு ஓம் எனும் பிரணவ மந்திரத்தின் உட் பொருளை உபதேசிக்கும் போது, தன் தாயாரின் மடிமீது முருகப் பெருமான் அமர்ந்திருந்தார்.

தாய்க்குத் தந்தையார், பிரணவ மந்திர உபதேசம் செய்த போது முருகப்பெருமானும் அவ்வுபதேசத்தைக் கேட்டார்.

புனிதமான மந்திரப் பொருளை குருவின் மூலமாகவே அறிந்து கொள்ள வேண்டும். மறைமுகமாக அறிந்து கொள்ளுதல் முறைமை ஆகாது. அது பாவம் என்று சாத்திரங்கள் கூறுகின்றன.

இக்குற்றத்திற்குப் பரிகாரம் தேடி முருகப்பெருமான் திருப்பரங்குன்றத்திற்கு வந்து தவம் செய்தார். இந்நிலையில், சிவபெருமானும், பார்வதி தேவியாரும் தோன்றி, முருகப் பெருமானுக்கு அங்கு காட்சி தந்து தவத்தைப் பாராட்டினார்கள்.

முருகன் தெய்வ யானை திருமணம் இந்த திருப்பரங்குன்றத்தில் நடந்தது.

அகநானூற்றில் இந்த மலை முருகன் குன்றம் என்று அழைக்கப்படுகிறது. மேலும் திரு முருகாற்றுப்படை, கலித் தொகை, மதுரைக் காஞ்சி, பரிபாடல் போன்ற சங்க இலக்கியங்கள் கூறுகின்றன.

இத்திருத்தலத்திற்கு இலக்கியங்களில் தண்பரங்குன்று, தென் பரங்குன்று, பரங்குன்று, பரங்கிரி, திருப்பரங்கிரி பரமசினம், சத்தியகிரி, கந்தமாதனம், கந்த மலை என பல்வேறு பெயர்கள் வழங்கப்படுகின்றன.

## இரண்டாம் படைவீடு திருச்செந்தூர்



முருகனுக்குரிய ஆறுபடை வீடுகளில் திருச்செந்தூர்மட்டும் கடற்கரையிலும், பிற ஐந்தும் மலைக்கோயிலாக அமைந்துள்ளது.

முருகப்பெருமான் சூரனை ஆட்கொண்ட பின்பு, தனது வெற்றிக்கு நன்றி தெரிவிக்கும் விதமாகக் சிவபூஜை செய்தார். தேவர்களின் குருவான வியாழ பகவான் இத்தலத்தில் தவமிருந்து முருகனை தரிசித்தார், முருகனிடம் தனக்குக் காட்சி தந்த இவ்விடத்தில் எழுந்தருளும்படி வேண்டிக்கொண்டார். அதன்படியே முருகனும் இங்கே தங்கினார்.

பின்பு, வியாழபகவான் விஸ்வகர் மாவை அழைத்து, இங்குக் கோயில் எழுப்பினார். முருகன், சூரனை வெற்றி பெற்று ஆட்கொண்டதால் இவர், “ஜெயந்திநாதர்’என அழைக்கப்பெற்றார்.

பிற்காலத் தில் இப்பெயரே “செந்தில் நாதர்’ என மருவியது. தலமும் “திரு ஜெயந்திபுரம்‘ (ஜெயந்தி வெற்றி) என அழைக்கப்பெற்று, “திருச்செந்தூர்’ என மருவியது.

## மூன்றாம் படைவீடு திருஆவினன்குடி (பழனி)

முருகனுக்கும் விநாயகருக்கும் நடைபெற்ற ஞானப்பழத்தை பெறுவதில் ஏமாற்றமடைந்த குமரன் அனைத்தையும் துறந்து பழனி மலையில் குடியேறினார். அன்றிலிருந்து அவர் நின்ற இடம் “பழம் நீ” (பழனி) என அழைக்கப்படுகிறது.

புராணங்களில் இப்படியான பெயர்க் காரணங்கள் வழங்கப்பட்டாலும் பழனம் என்றபழந் தமிழ்ச் சொல்லின் அடிப்படையில் உருவான பெயரே பழனி. பழனம் என்ற சொல் விளைச்சலைத் தருகின்ற நிலத்தைக் குறிக்கும். அப்படிப்பட்ட நல்ல விளைச்சல் நிலம் நிறைந்த பகுதி என்பதால் பழனி என்ற பெயர் உருவானது.

போகரால் நவபாசாணத்தில் முருகனின் சிலை வடிவமைக்கப்பட்டது.

திருவாவினன்குடி கோவிலையே நக்கீரர் பெருமான், திரு முருகாற்றுப்படையிலே முருகனின் மூன்றாம் படைவீடாக குறிப்பிட்டதுடன், கோபம் கொண்டு வந்து அமர்ந்த இடமான பழநி மலைக்கோவிலில் தண்டாயுதபாணித் தெய்வமாகவும், திருவாவினன்குடி திருத்தலத்தில் மயில் மீது அமர்ந்த குழந்தை வேலாயுத சுவாமியாகவும் காட்சியளிக்கிறார்.





## நான்காம் படைவீடு சுவாமிமலை

சுவாமிமலை சுவாமிநாதசுவாமி திருக்கோயில் முருகப் பெருமான் இக்கோயிலில் ‘தகப்பன்சுவாமி’எனப் புகழ் பெற்று காணப்படுகிறார். குருவாகி இருந்து அருளியதால் குருமலை என் றும், கந்தாசலம், சிரகிரி, சிவமலைஎன்றும் அழைக்கப்படுகிறது. இக்கோயிலின் மற்றொரு பெயர் திருவேரகம் என அழைக்கப்படுகிறது.

இறைவன் சுவாமிநாதனாக இருப்பதால் சுவாமி மலை என்றபெயர் நிலை பெற்றுவிட்டது. இங்குசிவன்சுந்த ரேசுவரர் தாயார் மீனாட்சி என பெயரில் உள்ளதால், இக்கோயில் மீனாட்சி சுந்தரேசுவரர் கோயில் என அழைக்கப்படுகிறது.

கும்பகோணம் சப்தஸ்தானத்தில் இத்தலமும் ஒன்று. முருகனின் அறுபடை வீடுகளில் இதுவும் ஒன்றாகும்.

தாளமும் சந்தமும் நிறைந்த மெய்ப் பொருட் துறைப் பாடல்கள் இயற்றிப் பல நூல்களைப் படைத்த அருணகிரிநாதர் மற்றும் நக்கீரர் இவ்வூரில் உள்ள முருகனைப் பாடிய பாடல்கள் திருப்புகழில் 4ம் திருமுறையில் உள்ளன.

## ஐந்தாம் படைவீடு திருத்தணி

முருகப் பெருமான்வள்ளியை திருமணம் செய்து கொண்ட தலமாகும். ஆண்டின் 365 நாட்களை குறிக்கும் படியாக, 365 படிகளைக் கொண்டது இந்த மலைக்கோயில். திருப்புகழ் பாடிய அருணகிரிநாதரால் பாடல் பெற்ற தலமாகும். முத்துச்சாமி தீட்சதராலும் பாடப்பட்ட தலம். இக்கோயிலை தணிகை முருகன் கோயில் என்றும் அழைப்பர்.

சங்க காலப் புலவரான நக்கீரர் இயற்றிய திருமுருகாற்றுப்படையில் இக்கோயில் குறித்த குறிப்புகள் காணப்படுகிறது. இக் கோயில் விசய நகர மன்னர்களாலும், உள்ளூர் நிலக் கிழார்களாலும் பேணப்பட்டு வந்தது.

தேவர்களுக்குத் தீராத துன்பம் கொடுத்து வந்த சூரபத்ம னுடன் போர் புரிந்து தேவர்களின் துயரத்தை நீக்கி, வள்ளியை மணந்து கொள்ள வேடர்களுடன் விளையாட்டாகப் போர் புரிந்து, முருகப் பெருமான் கோபம் தணிந்து அமர்ந்த தலம் திருத்தணி ஆகும். ஆகையால் இந்த தலம் தணிகை எனப் பெயர் பெற்றது.





## ஆறாம் படைவீடு பழமுதிர்சோலை

பழமுதிர்சோலை, முருகனின் ஆறுபடை வீடுகளில், ஆறாவது படை வீடாகத் திகழ் கின்றது. முருகன் சிறுவனாய் வந்து ஔவையாரை சோதித்த ஸ்தலமாகும்.

இங்கு தனது மாமனான பெருமாளின் அவதாரமாக திகழும் அழகருக்கு அருகிலேயே முருகன் வசிப்பதாக கூறப்படுகிறது.

அருணகிரிநாதர் இத்திருத்தலம் மீது திருப்புகழ் பாடியுள்ளார். அழகர் கோவில் தீர்த்த மலையில் இக்கோவில் அமைந்துள்ளது.

சோலைமலை என்ற பெயரும் இதற்கு உண்டு. இங்குள்ள முருகன் வெற்றிவேல் முருகன் என்று அழைக்கப்படுகிறார். பழமுதிர் சோலை என்பதற்கு பழங்கள் உதிர்க்கப் பெற்ற சோலை என்று பொருள் எடுத்துக் கொள்ளலாம்.

ஆறாவது படை வீடாகிய பழமுதிர்சோலை, வள்ளி மலையைக் குறிக்கும் என்று ஒருசாரார் தெரிவிக்கின்றனர்.

ஆனால் அருணகிரிநாதர், திருப்புகழில் வள்ளி மலையையும், பழமுதிர்சோலையை யும் தனித் தனியே பாடியிருக்கிறார்.

ஆறுபடை வீடுகள் ஒவ்வொன்றிலும் திருவிளையாடல் புரிந்த முருகன், இந்தத் தலத்தில், மதுரை நோக்கிச் சென்று கொண்டிருந்த ஔவையாரிடம் திருவிளையாடல் புரிந்ததாகச் சொல்கிறார்கள்.

திருமுருகாற்றுப்படையில் வரும் பழமுதிர்சோலை என்பதற்குபழம் முற்றிய சோலை என்று நச்சினார்க்கினியர் உரை எழுதி யிருக்கிறார். கந்தபுராணத் துதிப் பாடலில், வள்ளியைத் திருமணம் செய்ய விநாயகரை யானையாக வந்து உதவும்படி முருகன் அழைத்த தலம் பழமுதிர்சோலை என்று கூறுகிறார்.

பழமுதிர்சோலைக்கு சற்று உயரத்தில் நூபுர கங்கை என்ற புனித தீர்த்தம் அமைந்துள்ளது. இதற்கு சிலம்பாறு என்ற பெயரும் உண்டு. ஆயிரம் ஆண்டுகளுக்கும் மேலாக இந்த தீர்த்தத் தண்ணீர் வந்து கொண்டிருப்பதாக கூறுகிறார்கள்.

பக்தகோடிகளை அன்புடன் அழைக்கிறோம்
மதுரை கலையகம்
கோவில் குடைகள், தேர்ச்சீலைகள், தோரணங்கள், தொம்பைகள், பல்லக்கு, பன்னாங்கு வகைகள் தயாரிப்பாளர்.

V.சுந்தரவடிவேல்
Visit: www.maduraikalaiyagam.com
Cell: 98428 05939
27,மீனாட்சி தியேட்டர் தெரு, தெற்குவெளி வீதி, மதுரை-1

உலக வரலாற்றில் முதன்முறையாக இ-மெயிலில் வெளிவரும் இதழ்
விருப்ப சந்தா செலுத்த ஸ்கேன் செய்யவும்
e-magazine
ஆன்மிகமலர் டிரஸ்ட் வெளியீடு
www.aanmeegamalar.com
ஆன்மிகமலர்
ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!!
மெயில் புக்

படியுங்கள்...
aanmeegamalar.com
இதுவரை வெளிவந்த
185 e-book
கட்டணமின்றி டவுன்லோடு செய்து படிக்கலாம்

## கும்பாபிஷேகம் காணும் திருப்பரங்குன்றம்

# சுப்பிரமணியசுவாமி சிறப்பு

திருப்பரங்குன்றம் சுப்ரமணிய சுவாமிகோவிலின் கருவறை, ஒரு குகைக் கோவிலாகும். கருவறையில் ஐந்து குகைகள் மலையைக் குடைந்து அமைக்கப்பட்டுள்ளன. சுப்ரமணிய சுவாமி சந்நிதி, துர்காதேவி சந்நிதி, கற்பக விநாயர் சந்நிதி, சத்தியகிரீ ஸ்வரர் சந்நிதி, பவளக்கனிவாய்ப் பெருமாள் சந்நிதி ஆகிய ஐந்து சந்நிதிகள் இங்கு உள்ளன.

சத்தியகிரீஸ்வரர் சந்நிதி வாயிலிலுள்ள துவாரபாலர்களின் உருவங்களில் காணப்படும் ஆடை மடிப்பு கலையம்சங்களும், இதர சிற்ப அம்சங்களும் பிரமிக்கத் தக்கவையாக உள்ளன. ஐந்து சந்நிதிகளைத் தவிர, திருப்பரங்குன்றக் கோவிலில் அன்னபூரணிக் குகைக் கோவிலும், ஜேஷ்டா தேவிக்கான குகைக் கோவிலும் உள்ளன.




அர்த்த மண்டபத்தில்,சத்தியகிரீ ஸ்வரர் சந்நிதியை அடுத்துள்ள மலைப் பாறையிலும், பவளக்கனி வாய்ப் பெருமாள் சந்நிதியை அடுத்துள்ள பாறையிலும், திருமாலின் அவதாரங்களைக் குறிக்கும் புடைப்புச் சிற்பங்களும் உள்ளன.

கோவிலின் நுழைவாயிலிலுள்ள10 பெரிய கற்றூண்கள், நாயக்கர் காலச் சிற்பக் கலைத்திறனைக்காட்டும். ‘முருகன் தெய்வானை திருமணக் கோலம்‘ போன்ற கற்றூண்கள் அமைந்துள்ளன. முருகப் பெருமானின் அறுபடை வீட்டு கோயில்களில், இக்கோயில் அளவில் பெரியதாகும்.

இலிங்க வடிவில் இருக்கும் இம் மலையைப் பற்றிச் சைவ சமயக் குரவர்களில் சுந்தரமூர்த்தி நாயனார், திருஞானசம்பந்தப் பெருமான் ஆகியோர் இவ்வூருக்கு வந்து ஆலய வழிபாடு செய்து பதிகங்கள் பல பாடியுள்ளனர்.

சங்ககாலப் புலவரான நக்கீரர் இத்தலத்து முருகப் பெருமானை வழிபட்டு தனது குறைகளை நீக்கிக் கொண்ட திருத்தலம்




பரம்பொருளான சிவபெருமான், குன்றம் எனும் மலை வடிவாகக் காட்சியளிக்கும் இடம் திருப்பரங்குன்றம்; திரு + பரம் + குன்றம் எனப் பிரிக்கப்படுகிறது. பரம் என்றால் பரம்பொருளான சிவபெருமான் குன்றம் என்றால் குன்று (சிறுமலை). திரு என்பது அதன் சிறப்பை உணர்த்தும் அடைமொழியாகச் சேர்த்துத் திருப்பரங்குன்றம் என ஆயிற்று.

இக்குன்றமானது, சிவலிங்கவடிவிலேயே காணப்படுவதால் சிவபெருமானே குன்றின் உருவில் காட்சியளிப்பதாக எல்லோராலும் வணங்கப்பட்டு வருகிறது. இம்மலையின் உயரம் சுமார் 190 மீட்டராகும். இம்மலையை நித்தம் வலம் வந்து வழிபட்டால், தொழுவாரின் வினைகளெல்லாம் தீர்ந்துவிடும் என சம்பந்தர், தான் இயற்றிய தேவாரத்தில் பாடியுள்ளார்.




aanmeegamalar.com

# ஒவ்வொரு ராசிக்குரிய முருகன் கோயில்கள்!!



முருகன் கோவில்களில் முதன்மையானது, மயிலம் சுப்பிரமணியர் கோயில் செவ்வாயின் ஆதிக்கம் அதிகம் உள்ள முருகன் கோயில் இது. திண்டிவனம் அருகே உள்ளது இந்த கோயில். ஒரு முறை சென்று வாருங்கள்... வாழ்வில் நல்ல மாற்றத்தை உணர்வீர்கள்.. மேலும் செவ்வாய் ஆகர்ஷனம் அதிகம் உள்ள கோயில்கள் பற்றின விவரங்கள் கீழே...

இதன் விசேஷம் என்னவென்றால் இதன் அருகே உள்ள மண் எல்லாம் சிவப்பு நிறமாகத் தான் இருக்கும். ராசிப்படி முருகன் கோயில்கள்..

**மேஷம்:** தாண்டுகுடி முருகன் கொடைக்கானல்,
**ரிஷபம்:** சுவாமிமலை:
**மிதுனம்:** செவலூர் பூமினாதேஸ்வரர்
**கடகம்:** பழனி முருகன்
**சிம்மம்:** திருபரங்குன்றம் முருகன்
**கன்னி:** திருசெந்தூர் முருகன்
**துலாம்:** வைதீஸ்வரன் கோயில் முத்துக்குமார சுவாமி
**விருச்சிகம்:** மன்னச்சநல்லூர் பூமி நாதேஸ்வரர்:
**தனுசு:** திருத்தணி
**மகரம்:** வயலூர் முருகன்
**கும்பம்:** ஓரக்காட்டு பேட்டை குணம் தந்த நாதர் செங்கல்பட்டு அருகில்
**மீனம்:** திருவக்கரை பத்ர காளி

குறிப்பிட்ட கோயில்களில் உள்ள முருகனை, குறிப்பிட்ட ராசிகாரகள் வழிபட நன்மை நிச்சயம் உண்டு.

## முருகனும் 12 கைகளும்

முருகனின் பன்னிருகரங்களில் இரு கரங்கள் தேவர்களையும், முனிவர்களையும் காக்கின்றன.

மூன்றாவது கை அங்குசத்தி னைச் செலுத்துகிறது.

மற்றொரு கை ஆடை உடுத்திய தொடையில் பதிந்திருக்கிறது.

ஐந்து மற்றும் ஆறாவது கைகள் வேலைச்சுழற்றுகின்றன.

ஏழாவது கை முனிவர்களுக்கு அரும் பொருளை உணர்த்துகிறது.

எட்டாவது கை மார்பில் உள்ள மாலையோடு விளங்குகிறது.


ஒன்பதாவது கை வளைகளோடு சுழன்று வேள்வியை ஏற்கிறது.

பத்தாவது கை மணியை ஒலிக்கிறது.

பதினோராவது கை மழையை அருள்கிறது.

பன்னிரண்டாவது கை மணமாலை சூட்டுகிறது.





# ‘ராமருக்கு உதவிய அணில் போல’ ‘ஊர் கூடி தேர் இழுப்பது போல’ மன்னர்கள் வழியில் ஆலயத்திருப்பணி செய்வோம்.! வாருங்கள் பக்தர்களே...

மதுரை மகாபெரியவர் ஆலய திருப்பணியில் பங்கெடுக்க அரிய வாய்ப்பு..

பூசலார் நாயனார்.. தன்னிடம் வசதியில்லா நிலையில் மனதிலேயே சிவபெருமானுக்குக் கோயில் கட்டியவர். சிவனின் திருவிளையாடலாக அதே சமயத்தில், சோழ மன்னர் ஒருவரும் கோயில் கட்ட, பூசலார் கட்டிய மனக்கோயிலில் எழுந்தருளிய சிவபெருமான், மன்னர் மூலமாக அவரது பக்தியை உலகறியச் செய்தார்.

பூசலார் நாயனாரின் இருதயத்தில் எழுந்த கோயில் என்பதால், சென்னை அருகே திருநின்றவூரில் 'இருதயாலீஸ்வரர்' என்ற பெயரில் இன்றும் இருக்கிறது இக்கோயில்.

பாக்கியத்தை தவற விடலாமோ.?

சொந்தமாக வீடு கட்டுவதே 'குதிரைக் கொம்பு!' எனும் போது, இறைவனுக்கு கோயில் கட்டுவது அவ்வளவு எளிய விஷயமா.? ஒரு கோயிலுக்கான திருப்பணியில் நாம் பங்கெடுக்கும் வாய்ப்பு வருகையில், நாம் அதை விட்டு விடலாமா.? எவ்வளவு பெரிய பாக்கியம் அது..!

இதோ அந்த வாய்ப்பு உங்களைத் தேடி வந்திருக்கிறது. 'கருணைக்கடல் காஞ்சி மகா பெரியவா ஸ்ரீசந்திர சேகரேந்திர சரஸ்வதி ஸ்வாமிகள்' அருளால்..!

புண்ணிய திருத்தலமான 'திருமாலிருஞ்சோலை' எனப்படும் மதுரை கள்ளழகர் கோயில் மலை அடிவாரத்தில், காஞ்சி மகாபெரியவர் திருக்கோயிலை அமைக்க இருக்கிறது 'மதுரை அனுஷத்தின் அனுக்கிரஹம்'.

கள்ளழகர் திருக்கோயிலின் தீர்த்தக்குளம் அமைந்திருக்கும் பொய்கைக்கரைப் பட்டியில், இயற்கை எழில் சூழ பொலிவுற அமையவிருக்கிறது இக்கோயில். இதற்கான பூர்வாங்கப் பணிகள் வெகு விரைவாக தொடங்கப்பட இருக்கின்றன.

மதுரையில், 'ஸ்ரீகாஞ்சி மகாபெரியவா கிருஹம்' என்னும் கோயிலை நிர்வகித்து நடத்திவரும் 'அனுஷத்தின் அனுக்கிரஹம்' நிறுவனர் நெல்லை பாலு அவர்களின் சீரிய முயற்சியில் அமையவிருக்கிறது இந்தக் கோயில்.

அடுத்த ஓராண்டுக்குள் இந்தக் கோயில் கட்டுமானம் பூர்த்தி பெற்று ஸ்ரீஸ்ரீ காஞ்சி மகா பெரியவா சந்திர சேகரேந்திர ஸ்வாமிகளின் அருள் ஆசியோடு கும்பாபிஷேகம் செய்யப்பட இருக்கிறது.

அவரது அருளாசியைப் பெற்ற பக்தர்கள், "ராமருக்கு உதவிய அணில் போல", "ஊர் கூடி தேர் இழுப்பது போல" திருப்பணியில் பங்கு பெறும் அரிய வாய்ப்பினைப் பயன்படுத்திக் கொள்ள அன்போடு அழைக்கிறோம்.!

### எப்படி உதவலாம்.?

- ✦ திருப்பணிக்குப் பணமாக மட்டுமின்றி கட்டிட சாமான்கள், இதர பொருட்களாகவும் வாங்கிக் கொடுக்கலாம்.



- ✦ கோயில் அமையவிருக்கிற இடம், கட்டுமானம்சேர்த்து சதுர அடி ஒன்றுக்கு ரூ.3 ஆயிரத்து 500 ஆகுமெனக் கணக்கிடப்பட்டுள்ளது. சதுரடி வீதமாக ரூ.3,500 அல்லது 2 சதுர அடி, 5 சதுர அடி, 10 சதுர அடிஎன விரும்பும் அளவுகளில் அதற்கான தொகையை தரலாம்.
- ✦ கோயில் அமைவதற்கான செலவுகள் பல லட்சங்களைத் தொடுவதால், ரூ.1 லட்சம் மற்றும் அதற்கு மேல் நன்கொடை தரும் கொடையாளர்களின் பெயர்கள் கல்வெட்டில் பொறிக்கப்பட இருக்கிறது.

### மக்கள் பணியில்..

Rtn.நெல்லை பாலு, நிறுவனர் அனுஷத்தின் அனுக்கிரகம், நி102, சாந்தி சதன் குடியிருப்பு, கோச்சடை, மதுரை 625016 Ct: +91 9442630815
தாங்கள் அளிக்கும் நன்கொடைகளுக்கு 80G வரி விலக்கும் உண்டு. நன்கொடைகளை அனுப்ப வேண்டிய கணக்கு விவரம் –
தொடர்பு எண்: GPay & Phonepay: +91 9442630815
**Ac Details:**

**Maduraiyun Atchaya Paathiram Trust,**
**AC No: 110031396472**
**Canara - Madurai West Avani Moola Stteet Branch, IFSC: CNRB0001010**
**MICR: 625015006**

## பழநி முருகனை காக்கும் காவிரி நதி

அறுபடை வீடுகளில் மூன்றாம்படை வீடான திருவாவினன்குடி அமைந்து இருக்கும் பழனியில் பங்குனி மாதம் உத்தரம் நட்சத்திர திதியில் நடைபெறும் விழா பங்குனி உத்தரம் ஆகும். அனைத்து அறுபடைவீடுகளில் பங்குனி உத்தரம் விழா நடைபெற்றாலும், பழனியில் நடைபெறும் பங்குனி உத்தரம் திருவிழாவும், தேரோட்டமும், சிறப்பு வாய்ந்த திருவிழாவாகும்.

திண்டுக்கல் மாவட்டமும், அதைச் சுற்றியுள்ள மாவட்டங்களிலிருந்து, சைவ சமயத்தவர்கள்,ஈரோடு மாவட்டம், கொடுமுடிக்குச் சென்று காவிரி நதியில் தீர்த்தம் (புனிதநீர்) கொண்டுவந்து, பழனியில் போகரால் நிறுவப்பட்ட நவபாசாண முருகனுக்கு செலுத்துவார்கள்.

பங்குனியில் வெயில் கடுமையாக இருக்கும், நவ பாசாணத்தால்ஆன முருகன் சிலை வெப்பத்தால்சிதைந்து போகாமல் இருக்க மூலிகைகள் கலந்த காவிரி நதியின் நீரால் குளிர்விப்பதற்காக ஏற்படுத் தப்பட்ட திருவிழா பங்குனி உத்தரம் திருவிழா.

## திருப்பம் தரும் திருகூடல்மலை

முருகனின் முதல்படை ஸ்தலம் திருப்பரங்குன்றம் அருகேஉள்ளது புஜண்டர்மலை எனப்படும் திருகூடல் மலை உள்ளது.


இந்த மலையில் மானாமதுரை அருகே கட்டிகுளத்தில் அவதரித்த தவதிரு சூட்டுக் கோல் மாயாண்டி சுவாமி பிரதிஷ்டை செய்து வழிபட்ட நவநீதபெருமாள், ஸ்ரீ பால தண்டாயுதபாணி சுவாமி கோவில் உள்ளது.

தினமும் இங்கிருந்து ஸ்ரீசோமப்பா சுவாமி, ஸ்ரீ மாயாண்டி சுவாமி ஆகியோர் ஸ்ரீமீனாட்சிஅம்மன் யானைமலை யோக நரசிங்க பெருமாள் திருப்பரங்குன்றம் முருகனை தரிசித்து தங்களின் தவவலிமையால் பக்தர்களுக்கு பல்வேறு அற்புதங் களைபுரிந்து உள்ளனர்.

இங்கு சித்தர்கள் தவபுரிந்த குகை மற்றும் சித்தர்கள் ஜீவசமா கோவில்கள் உள்ளது. இவை அனைத்தும் சூட்டுக்கோல் மாயாண்டி சுவாமி குருநாதர் சூட்டுக்கோல் ராமலிங்கம் சுவாமி நாமத்தில் ராமலிங்கம் விலாசம் என்ற பெயரில் திருகூடல்மலையில் கோவிலும் அடிவாரத்தில் சித்தர்கள் ஜீவ சமாதி கோவில் ஆஞ்சநேயர் பீடம், பசுமடம் உள்ளது.

மலையோறிசெல்ல படி, சாலை வசதி உள்ளது. தினமும் அன்னதானம் மற்றும் அமாவாசை பௌர்ணமி நாட்களில்







சிறப்பு வழிபாடு பூஜை நடைபெறுகிறது.

திருகூடல்மலையில் சென்று சித்தர்கள் ஜீவசமாதி கோவிலில் வழிபாடு செய்து வரும் பக்த்தர்களுக்கு தங்களது வாழ்வில் திருப்பம் ஏற்படுவதாக கூறப்படுகிறது.

மேலும் ஆலயதகவல் பற்றி அறிய செல்9842124841.

## உடல் வசீகரத்தை தரும் கந்த அலங்காரம்

இறைவனை நகை, அணிகலன்கள் போன்றவற்றை பயன்படுத்தி அலங்கரிப்பார்கள், இது கடவுள் மீது பக்தர்களுக்கு உள்ள அதீத பக்தியின் வெளிப்பாடாகும்.

இதிலும் குறிப்பாக முருகன், பெருமாள் போன்றவர்கள் அலங் காரப் பிரியர்கள், இவர்களைவித விதமாக பக்தர்கள் அலங்கரிப்பார்கள். இதைப் போன்றுவார்த் தையால் இறைவனை அலங்கரிக்கும் பாடல்களும் இந்து மதத்தில் அதிகம் உள்ளது. இதில் முருகனுக்கு பாடப்படும் "கந்த அலங்காரம்" மிக முக்கியத்துவம் வாய்ந்தது.

அலங்காரத்தால் எப்படி இறைவனை வர்ணிப்போமோ, அதே போல வார்த்தையால் வர்ணிப்பது மிகவும் சிறப்பு. இதன் உட்பொருள் மீண்டும் மெய்ஞானத்தைதான்குறிக்கிறது. இந்த கந்தன் அலங்காரத்தை, புற வாழ்க்கைக்கு பயன் படுத்தலாம்.

புற வாழ்க்கைக்கும், மேனி அழகிற்கு அதிக முக்கியத்துவம் கொடுக்க கூடியவர்கள் அது தொடர்பான துறையிலே இருப்பவர்கள் உடல் வசீகரமாக இருக்க நினைப்பவர்கள் அனைவரும் இந்த கந்த அலங்காரத்தை ஓதி வந்தால் நல்ல பலன் கிடைக்கும்.

# முருகனின் பல்வேறு தோற்றங்கள்

முருகனின் பலவிதமான தோற்றங்களும் (16) அவரை வணங்குவதால் உண்டாகும் அனுகிரகங்களும்



### ஸ்ரீ பால சுவாமி

இவர், உடல் ஊனங்களையும், குறைகளையும் அகற்றும் தெய்வம். இவரை வழிபடுபவர்களுக்கு உடல் நலம் கிடைக்கும். திருச்செந்தூர், திருக்கண்டிர், ஆண்டாள் குப்பம் கோயில்களில் பாலசுவாமி திருவுருவம் இருக்கிறது.

### ஸ்ரீ தேவசேனாதிபதி

இவரை வழிபட்டால் மங்களகரமான வாழ்வு கிடைக்கும். சென்னிமலையாண்டவர் திருக்கோயிலில் கர்ப்பக்கிரக மாடம் ஒன்றில் இந்த திருவுருவம் உள்ளது.

### ஸ்ரீ பிரம சாஸ்தா

இவரை வழிபட்டால் எல்லா வகை வித்தைகளிலும் தேர்ச்சி பெறலாம். சகலவித கலையறிவும் அதிகரிக்கும். கல்வியில் தேர்ச்சி கிட்டும். காஞ்சிபுரத்தில் உள்ள குமரக்கோட்டம் ஆனூர், பாகசாலை,சிறுவாபுரி ஆகிய இடங்களில் பிரம்மசாஸ்தா திருக்கோலம் உள்ளது.

### ஸ்ரீ கந்தசுவாமி

இவரை வழிபட்டால் சகல காரியங்களும் சித்தியாகும். பழனிமலை ஆண்டவர் திருவடிவம் இது.

### ஸ்ரீ கஜவாகனர்

இவரை வழிபட்டால் துன்பங்கள் விலகி ஓடும். திருமருகல், மேல்பாடி, சிதம்பரம் நடராஜர் கோயில் கீழைக் கோபுரம் ஆகிய இடங்களில் யானை மீதிருக்கும் இவரது திருவுருவம் உள்ளது.

### ஸ்ரீ கிரவுஞ்சபேதனர்

இவரை வழிபட்டால் துன்பங்கள் விலகும். மனச்சஞ்சலம் அகலும். திருநெல்லிக்கா, திருக்குறங்குடி, திருநளி பள்ளி ஆகிய இடங்களில் இவரது திருவுருவம் உண்டு.

### ஸ்ரீ கார்த்திகேயா

இவரை வழிபட்டால் சகல சவு பாக்கியங்களும் வந்து சேரும். கார்த்திகை நட்சத்திர நாட்களில் இவ ரை வழிபடுவது விஷேச மான பலன்களைத் தரும். கும்பகோணத்தில் உள்ள கும்பேஸ்வரர் கோயிலிலும், தாராசுரம் ஐரா வதீச்வரர் கோயிலிலும் கார்த்திகேயர் திருவுருவம் உள்ளது.

### ஸ்ரீ குமாரர்

இவரை வழிபட்டால் ஆணவம் அடியோடு நீங்கும். நாகர்கோவில் அருகில் இருக்கும் குமாரகோவிலில் இவரது திருவடிவம் உண்டு. கங்கை கொண்ட சோழபுரத்தில் இவருக்குப் பஞ்சலோக விக்கிரகம் இருக்கிறது.

### ஸ்ரீ சேனானி

இவரை வழிபட்டால் பகை அழியும். போட்டிகளில் வெற்றிகிடைக்கும். பொறாமை நீங்கும். தேவிகாபுரம் ஆலயத்தில் சேனானி திருவுருவம் இருக்கிறது.

### ஸ்ரீ சரவணபவர்

தன்னை வழிபடும் அடியவர்களுக்கு மங்கலம், ஒலி, கொடை, சாத்வீகம், வீரம் முதலிய குணங்களை அளிப்பவர். சென்னிமலை, திருப்போரூர் ஆகிய இடங்களில் இவரது திருவடிவம் இருக்கிறது.

### ஸ்ரீ சக்திதரர்

இந்த முருகனை வழிபட்டால் நினைத்த காரியங்கள் வெற்றியுடன் முடியும். திருத்தணிகையில் எழுந்தருளியிருக்கும் மூலவர் திருவடிவம் ஞானசக்திதரர்' திருக்கோலமாகும்.

### ஸ்ரீ சிகி வாகனர்

மயில் மீது இருக்கும்முருகன் அருட்கோலம் இது. ஆலயம் பலவற்றில் அழகுற அமையும் திருவடிவம். தன்னை வழிபடுபவர் களுக்கு இன்பமான வாழ்வு அளிப்பவர்.

### ஸ்ரீ சோமாஸ் கந்தர்

இவரை வழிபட்டால் சிவசக்தி யை சேர்த்து வழிபட்ட பலன்கிடைக்கும். ஆலயப் பெருந்திரு விழாவின் போது பஞ்சமூர்த்திகளில் முதல்வராகவும் திருத்தேரில் மீது எழுந்தருளி அருள் தருபராகவும் உள்ள அற்புத வடிவம்.

### ஸ்ரீ சுப்பிரமணியர்

இவர் தன்னை வழிபடும் பக்தர்களின் வினைகளை நீக்கி ஆனந்தப் பேற்றினை அளிக்கக் கூடியவர். நாகை மாவட்டத்திலுள்ள திருவிடைகழி முருகன் கோயில் மூலவர் சுப்பிரமண்யர் ஆவார்.

### ஸ்ரீ வள்ளி கல்யாண சுந்தரர்

இவரை வழிபட்டால் திருமணத் தடைகள் விரைவில் அகலும், கன்னிப் பெண்களுக்குக் கல்யாண பாக்கியம் கிடைக்கும். திருப்போரூர் முருகன் கோயில் தூண் ஒன்றில் இவர் திருவுருவம் இருக்கிறது.

### ஸ்ரீ தாரகாரி

ஹதாரகாசுரன்' என்னும் அசுரனை அழித்ததால் முருகப்பெருமான் இத் திரு நாமத்தைப் பெற்றார். உலக மாயைகளில் இருந்து விடுபட வழி செய்யும் திருக்கோலம் இது. விராலி மலையில் உள்ள முருகன் கோயிலில் தாரகாரி இருக்கிறார்.

# திருப்பரங்குன்றமும் கல்வெட்டும்





திருப்பரங்குன்றம் சுப்ரமணியசுவாமி கோவிலுக்கு வடக்கில் சுவாமி சந்நிதி தெருவில் பழமையான சொக்கநாதர் கோயில் உள்ளது.

திருப்பரங்குன்றத்தின் உச்சியில், காசி விசுவநாதர் கோவில் உள்ளது.

திருப்பரங்குன்றத்தின் தென்பகுதியில் (தென்பரங்குன்றம்), உமை ஆண்டார் குகைக் கோவில் உள்ளது.

மலையின் வடமேற்குப் பகுதியில், சமணர் கற்படுகைகள் உள்ள ஒரு குகை உள்ளது.

சங்க இலக்கியங்களில் முருகப்பிரானுடைய உறைவிடமாகக் கருதப் பெறும் திருப்பரங்குன்றத்தில் 3 குகைகள் உள்ளன. 2 குடைவிக்கப்பெற்ற கோயில்கள்.

ஒன்று இயற்கையாக அமைந்த குகையாகும் இப்பொழுது முருகப்பிரானுடைய பெருங்கோயிலாக வழிபாட்டில் திகழ்வது பொ.ஆ. 8ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தது. பராந்தக நெடுஞ்சடையன் என்ற பாண்டிய மன்னன் காலத் தில் தோற்றுவிக்கப்பெற்றது.

இக்கோயிலில் நெடுஞ்சடையன் காலத்தில் துர்க்கைக்கும் ஜேஷ்டா தேவிக்குமாகக் கட்டப்பெற்ற கோயிலாகும். இயற்கையாக அமைந்த குகைத்தளத்தில் பல படுக்கைகள் உள்ளன. அவற்றில் தமிழி எழுத்துக்கள் உள்ளன. அவற்றுள் மிகக் குறிப்பிடத்தக்க கல்வெட்டு ஒன்று உண்டு.

### எருக்காட்டூர் இழகுடும்பிகன் பொலாலையன் செய்தான் ஆய்சயன் நெடுசாதன்

எருக்காட்டூரைச் சேர்ந்த பொலாலையன் என்பவரும் ஆய்சயன் நெடுசாதன் என்பவரும் சமணர் படுக்கை செய்து கொடுத்ததைப் பற்றியது.

முக்கியத்துவம் :

ஈழத்தைச் சேர்ந்த பொலாலையன் என்று எடுத்துக்கொண்டால் இவர் ஈழம் குறித்துக் கிடைக்கும் முதல் கல்வெட்டாகக் கொள்ளலாம். ஆயினும், இதை ஈழக்குடும்பத்தைச் சேர்ந்த எக்காட்டூர் பகுதியைச் சேர்ந்தவர் என்றும் கொள்ளலாம். ''ஈழர்'' என்பதற்குப் பனை மரத்திலிருந்து பதனி இறக்கும் இனத்தைச் சேர்ந்தவர் என்றும் பொருள் உண்டு.




aanmeegamalar.com

# பெருமாளுக்கு உதவி செய்த மருமகன் யானை வாகனம் கொண்ட முருகன்



கயிலாய மலைக்கு ஈடாக கருதப்படும் மலை திருத்தணி மலை. என்று அருணகிரிநாதர் திருப்புகழில்பாடி இருக்கிறார். முருகப்பெருமானுக்கு உரிய திருவுருவங்கள் 16. அதில் ஞானத்தை அருளும் ஞானசக்திதரனாக திருத் தணியில் வீற்றிருக்கிறார். சாந்தமான முகத்துடன், இடது கையைத் தொடையில் வைத்து, வலது கையில் வேல் தாங்கி காட்சி தருகிறார்.

தாரகாசுரனிடம் போர்புரிந்து சக்ராயுதத்தை இழந்த திருமால், மீண்டும் தன் சக்ராயுதத்தை பெற்றுத் தந்த பெருமை கொண்டவர் இம்முருகனே. முருகப்பெரு மானுக் குரிய வாகனமாக எங்கும் மயில் இருக்க, இங்கு யானை வாகனமாக அமைந்துள்ளது. லட்சுமியின் அம்சமான இந்த யானையுடன் கூடிய முருகனை வழிபடுவோருக்கு தேவர்களுக்கு நிகரான செல்வவளம் உண்டாகும் என்பது ஐதீகம். இதன் காரணமாகத்தான் புதுவருடப் பிறப்பின் போது இந்தத் தலத்தில் மக்கள் கூட்டம் அலைமோதுகிறது.

இங்குள்ள இந்திரச்சுனை நீரால் முருகப்பெருமானுக்கு தினமும் அபிஷேகம் செய்யப்படுகிறது. இதில் பக்தர்கள் நீராட முடியாது. மார்கழி திருவாதிரை நாளில் முருகனுக்கு வெந்நீர் அபிஷேகம் செய்யப்படுவது சிறப்பு.




# தெய்வீக ஆற்றல் கிடைக்கும் கருப்பனேந்தல் மடம்

## மண்ணில் புதையுண்ட முருகனை அடையாளம் காட்டிய சித்தர்


சிவகங்கை மாவட்டம் மானாமதுரை அருகே கட்டிக்குளம் கருப்பனேந்தல் மடம் இங்கு மகா சித்தர் சூட்டுக்கோல் மாயாண்டி சித்தர் ஜீவஒடுக்க கோவிலாகும். இந்த இடத்தை சுற்றி ஏராளமான வயல் வெளிகளும் நீர் நிலைகள் உள்ளது.

கருஎன்றால் உயிர் ஏந்தல் என்றால் நீர்நிலைகள் உள்ள பகுதியாகும். ஆல், அரசு, வேம்பு, வில்வம், போன்ற உயிர் வளர்க்கும் மரங்களாகும். இந்த அணுக்கள் மூலமாக வித் திட்டு வாழ்ந்த மகான்கள் சூட்டு கோல் ராமலிங்க சுவாமி, சித்தர் செல்லப்பாசுவாமி, மகாசித்தர்மாயாண்டி சுவாமி, பிராமணத்தி அம்மாவும், சிலம்பு சுவாமி, பொன்னின் அம்மையார் போன்றவர்கள் வாழ்ந்த இடமாக கருப்பனேந்தல் மடம் இருந்து உள்ளது.

நீரநிலைகள் நிறைந்தஇப்பகுதி யில் மகான்கள் வாழ்ந்து பிராண உயிர் காற்றை மண்ணில் பரப்பிய இடமா கவும் ஞானபீடமாகவும் பக்தர்களின் மனகுறைகளை அறிந்து மகாசித்தர் சூட்டுகோல் மாயாண்டி சித்தர் தீர்ப தாகவும் சுவாமியின் முதல் ஜீவ ஒடுக்கமாகவும் கருப்பனேந்தல் மடம் உள்ளது.


தற்போது கருப்பனேந்தல் மடத்தில் பக்த்தர்களின் கைங்கர்யம் மூலம் புதிதாக தத்ரூபமாக வெள்ளி சூட்டு கோல் ஐம்பொன்னால் மகாசித்தர் மாயாண்டி சுவாமி சிலை பிரதிஷ்டை மற்றும் புதிய மயில் வாகனம் கருப்ப னேந்தல் மடத்தில் உள்ளது. தினமும் ஏராளமான பக்தர்கள் சுவாமி தரிசனம்





செய்து செல்கின்றனர்.

பார்த்திபனூருக்கும் கமுதிக்கும் இடையில் கொடும்பளூர் என்ற சிற்றூர் உள்ளது. அங்கு சுவாமி கள் முள் படுக்கையில் படுத்திருந்தார். அப்போது அவ்வூர் மக்களிடம் இந்த இடத்தில் முருகன் சிலை ஒன்று மண்ணில் புதைந்து கிடக்கிறது. தோண்டி எடுத்து வழிபட வேண்டும் என்று கூறினார். மக்கள் அவ்விடத்தைத் தோண்ட அழகான முரகன் சிலை கிடைத்தது. அங் கோயில் கட்டி மண்ணில் புதைந்து கிடந்து முருகன் சிலையை பிரதிஷ்டை செய்து திருவிழாக்கள் நடத்தி வணங்கி வருகின்றனர்.



# பக்தர்களை காக்கும் பத்துக் கை கொண்ட

# முட்டகுறிச்சி அருள்மிகு பத்ரகாளி அம்மன் திருக்கோவில்

சிவகங்கை மாவட்டம் மானா மதுரை அருகே பரமக்குடி சாலை யில் (தெ.புதுக்கோட்டை வழி)பத்து கைகளுடன் காட்சி தரும்பத்ரகாளி அம்மன் திருக்கோவில் உள்ளது. சக்தி வாய்ந்த தேவியாக வணங்கப் படுகிறார். பத்துகைகளும் பத்து திசைகளையும் குறிக்கின்றன. இது சர்வவியாபகத்தை உணர்த்து கிறது.

மேலும், அவளுடைய கைகளில் உள்ள ஆயுதங்கள் அறியாமையை அகற்றுவதற்கும், ஞானத்தைவழங்கு வதற்கும் அடையாளமாக உள்ளது.

பத்ரகாளி அம்மனின் பத்து கைகளும் பத்து திசைகளையும் குறிக்கின்றன:

பத்து கைகள், பத்து திசைகளை குறிக்கின்றன: நான்கு கார்டினல் புள்ளிகள் (வடக்கு, கிழக்கு, தெற்கு, மேற்கு), நான்கு இடைநிலை புள்ளி கள் (வடகிழக்கு, வடமேற்கு, தென் மேற்கு, தென்கிழக்கு), மற்றும் மேலே மற்றும் கீழே உள்ள புள்ளிகள்.

இது சர்வ வியாபகத்தின்கருத்தை குறிக்கிறது. அதாவது பத்ர காளி எல்லா இடங்களிலும் நிறைந்திருக்கி றாள்.

பத்து கைகளும், பத்து சக்தி களை குறிப்பதாகவும் நம்பப் படுகிறது. இடது புறமாக உள்ள ஐந்து கைகள் உல கில் உள்ள தீமைகள் மற்றும் தீயவர்களை அழிக்கவும் வலது புறமாக உள்ள ஐந்து கைகள் உலகம் நன்மை பெறவும் பக்தர்களை காத்து அருள் புரியவும் கொண்டு பத்ரகாளி பக்தர் களுக்கு காட்சி தருகிறார்.

இதன்மூலம் நன்மை செய்பவர்களுக்கு நல்லருள் புரிந் தும் தீமை செய்பவர்களை அவர்கள் அதை அறிந்து திருந்திட வழி செய் தும் சம நிலையில் காட்சி தருகிறார்.

### பத்து கைகளில் உள்ள ஆயுதங்கள்:

வாள்: அறியாமையை அகற்றி, உண்மையான மற்றும் நிலையான வற்றை அறிந்துகொள்ள உதவுகிறது.

பிற ஆயுதங்கள்: பல்வேறு வகை யான தீமைகளை அழிப்பதற்கும்,பக்தர் களை பாதுகாப்பதற்கும் அடையாள மாக உள்ளது.

### பத்ரகாளி அம்மன் வழிபாடு:

பத்ரகாளி அம்மன், காளியின் உக் கிரமான வடிவமாகக் கருதப்படுகிறார் மற்றும் தீய சக்திகளை அழிப்பவளாக வணங்கப்படுகிறார்.

அவர் தீயவர்களை அழிப்பதற்காக அவதரித்தாலும், பக்தர்களுக்கு சாந்த சொரூபியாக இருக்கிறார்.

நவராத்திரி உற்சவத்தில், துர் காஷ் டமி நாளில் பத்ரகாளி அம்மன் வழிபாடு செய்வது மிகவும் சிறப்பு.

பத்ரகாளி அம்மனின் அரு ளால், கல்வி, செல்வம்,



வீரம் போன்ற பலன்கள் கிடைக்கும் என்று நம்பப் படுகிறது.

பத்ரகாளி அம்மன் பத்து கை களுடன் காட்சி அளிக்கிறார்.

குறிப்பாக, இளையான்குடி வட்டம் குறிச்சி ஊராட்சி முட்டகுறிச்சி கிராமத்தில் உள்ள பத்ரகாளி அம் மன் கோவில் மிகவும் பிரசித்தி பெற் றது.



பத்ரகாளி அம்மன் வழிபாடு, சப்தகன்னியர் மற்றும் பத்து மகா வித்யாக்களுடன் தொடர்புடையது.

இந்த கோவில் க்ஷத்திரிய நாடார் உறவின்முறைக்கு பாத்தியமானது.

நாடார்களின் தோற்றம் குறித்த தொன்மக்கதை ஒன்று உண்டு. இதன்படி, தேவகன்னிகளுக்கும் சத்திரிய மகரிஷிக்கும் பிறந்த ஏழு குழந்தைகளைப் பத்திரகாளி அம்மன் எடுத்து வளர்த்ததாகவும் அவர்களிலிருந்தே நாடார் சமூகம் தோன்றியதாகவும் சொல்லப்படுகிறது. இதன் அடிப்படையில் நாடார்களைப் பத்திரகாளியின் மைந்தர்கள் என்று அழைப்பது உண்டு.

இந்த கதையின் அடிப்படையில், நாடார் சமூகம் பத்திரகாளி அம் மனின் வழித்தோன்றல்கள் என்று கருதப்படுகிறார்கள்.

மிகவும் பழமை வாய்ந்த இந்த திருத்தலத்தை பனிரெண்டு ஆண்டு களுக்கு ஒரு முறை புனரமைத்து கும்பாபிஷேகம் நடத்தப்பட்டு வரு கிறது . கடந்த ஜூன் 8 ந்தேதி மகாகும்பாபிஷேகம் நடைபெற்றது.

அதைத் தொடர்ந்து மண்டல பூஜை வழிபாடு வரும் ஜூலை 26 ந்தேதி நடைபெற உள்ளது.

பத்ர காளி அம்மன் தொடர்ந்து வலிமை உருவாக்கம் செய்யப்பட்டு வழிபடும் பக்தர்களுக்கு நல்லருள் புரிந்து காட்சி தருகிறார்.

தினந்தோறும்காலை மாலை இரு வேளையும் பூஜைகள் நடைபெறுகின் றன.

இ க் கோ வி லி ல் விநாயகர், முருகன், பேச்சியம்மன், ஆஞ்சநேயர், பைரவர், சனீஸ்வரர் உட்பட நவக்கிரகங்கள், பலிபீடம், லட்சுமி ஆகிய பரிவார தெய்வங் களும் அருள்பாலித்து கொண்டு இருக்கிறார்கள்.

மாதந்தோறும் சங்கடஹர சதுர்த்தி, கார்த்திகை பூஜை, பௌர் ணமி பூஜை, தேய்பிறை அஷ்டமி பூஜைகள் அந்தந்த நாட்களில் நடை பெறுகிறது.

ஒவ்வொரு செவ்வாய் மற்றும் வெள்ளிக்கிழமைகளில் பொங்கல் வைத்து பூஜைகள் நடைபெறுகின்றன.

ஆடி மாதம் மற்றும் பங்குனி மாதங் களில் திருவிளக்கு பூஜை புரட்டாசி மாதத்தில் சனிக்கிழமை தோறும் பஜனைகள், நவராத்திரி பத்து நாட்களும் சிறப்பு அலங்காரத்தில் அம்மன் காட்சி தருதல், பங்குனி மாதத்தில் ஆலயத்தை சுற்றி பொங் கல் வைத்து வழிபாடு செய்வது பத்து நாட்கள் திருவிழா நடைபெறுகிறது.

பைரவர் பூஜை மற்றும் ஒவ்வொரு சிறப்பு நாட்களில் சிறப்பு பூஜைகள் நடைபெற்று கொண்டு வருகிறது சிறப்பு.

திருத்தலம் செல்லும் வழி

மானாமதுரை கீழ் கரை வழியாக பரமக்குடி செல்லும் வழி, பரமக்குடியில் இருந்து வலது புறமாக மானாமதுரை செல்லும் வழியில் தெ.புதுக்கோட்டை பேருந்து நிறுத்தத்தில் உள்ளது.

வழிபாடு செய்ய பக்தர்கள் அணுக வேண்டிய நிர்வாகிகள்

கி.ஸ்ரீனிவாசன் செயலாளர்
9842961225
சி.தங்கராசு பொருளாளர்
9751304404.


48 ஆம் நாள் மண்டலாபிஷேகம்
சிவகங்கை மாவட்டம், இளையான்குடி வட்டம், குறிச்சி ஊராட்சி முட்டக்குறிச்சி கிராமத்தில்
எழுந்தருளியுள்ள க்ஷத்திரிய நாடார் உறவின் முறையாளர்களுக்கு பாத்தியமான
அருள்மிகு ஸ்ரீ பத்ரகாளியம்மன் ஆலய
48 ஆம் நாள் மண்டலாபிஷேகம்
நாள் 27.07.2025 ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணிமுதல் 10.30 மணியளவில்
பகல் 12.00 மணியளவில் மஹா அபிஷேகம் தீபாராதனை நடைபெறும்
அனைவரும் வருக! அம்மன் அருள் பெறுக!!
வை. சுப்பிரமணியன்
இ.மு.குமரேசன் முட்டக்குறிச்சி
கி.ஸ்ரீனிவாசன் செயலாளர்
வே.தனபாலன் முட்டக்குறிச்சி
ந.சு.ச.திருமூர்த்தி M.E.,
தி.சுதா M.E.,
K.லெட்சுமி முட்டக்குறிச்சி
R.D.கேசவகுமார் B.Sc.,B.Ed.,
R.D.பத்மநாபன் PACCS &Q1255
ப.மனோன்மணி முட்டக்குறிச்சி
அ.சாந்தி முட்டக்குறிச்சி
D.அன்பழகன் B.A.,B.L., சமரசர்
ந.சு.ச.சரவணன் M.E., பொறியாளர்
திருமதி.பிரமிளாதேவி MCA.,
ஜெ.இராமலெட்சுமி ஆசிரியை
கி.ஜெயபால்
வே.போஸ் முட்டக்குறிச்சி
M.S.கேசவன் M.A.,
M.சிவகுருநாதன் தலைமை ஆசிரியர்
B.கருணாநிதி முட்டக்குறிச்சி
S.செந்தில்நாதன் முட்டக்குறிச்சி
M.நவநீதம் DME.,
க.சிவகுமார்
S.S.அன்பு தெட்சிணாமூர்த்தி
கு.கணேசன் முட்டக்குறிச்சி
M.தனசேகரன் DME., முட்டக்குறிச்சி
S.சுரேஷ் MBA., முட்டக்குறிச்சி
M.வெங்கடேஸ்மாறன் CRPF முட்டக்குறிச்சி
சி.ஞானபாண்டி முட்டக்குறிச்சி
கு.செந்தில்முருகன் முட்டக்குறிச்சி
S.முனியசாமி முட்டக்குறிச்சி
த.ராம்குமார் M.E.,
த.லெட்சுமணன் M.E.,
V.M.பாலன் முட்டக்குறிச்சி
த.நடேஷ்குமார் LIC ஏஜெண்ட்
M.கார்த்திகேயன் B.E.,M.S., முட்டக்குறிச்சி
M.ஜெயன்வேல் B.E.,M.Tech., முட்டக்குறிச்சி

# இயலாதோர், ஆதரவற்றோருக்கு உணவு வழங்கி... முன்னோர் ஆசீர்வாதம் பெறுங்கள்

# மதுரையின் அட்சயப் பாத்திரம் டிரஸ்ட்

Regd.No.4-50/2021 நன்கொடைகளுக்கு 80G வரிவிலக்கு உண்டு



மதுரையில் ரோட்டோரத்தில், மனநலம் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் உணவுக்காக தவித்துக் கொண்டிருப்போருக்கு உதவும் விதத்தில் "மதுரையின் அட்சயப் பாத்திரம் டிரஸ்ட்" என்ற அமைப்பை தொடங்கி கடந்த **1500** நாட்களுக்கு மேலாக தினமும் 300 பேருக்கு உணவு வழங்கி வருகிறோம்.

தங்களது திருமண நாள், பிறந்த நாள், குழந்தைகளின் பிறந்த நாள், மூதாதையர்களின் நினைவு நாள் மட்டுமின்றி பிற நாட்களிலும் இந்த புனிதப் பணியில் தாங்களும் கரம் கோர்த்தால் இத்திட்டம் வெற்றியடையும் என்பது உண்மை! சந்தோஷத்தில் பெரிய சந்தோஷம் அடுத்தவரை சந்தோஷப்படுத்திப் பார்ப்பது தான்.

இயலாதவர்கள் மற்றும் மனநலம் பாதிக்கப்பட்டு ரோட்டோரத்தில் இருப்பவர்களின் வயிற்றுப்பசி ஆற்றுவது மூதாதையர்களுக்கு திதி கொடுப்பதற்கு சமமானது

## தானத்தில் சிறந்த தானம் அன்னதானம்

ஒரு நாளுக்கு ஒரு நபருக்கு ரூ.40 வீதம் 300 பேருக்கு ரூ. 12,000 ஆகிறது

| | |
|---|---|
| 50 நபர்களுக்கு - ரூ.2,000 | 200 நபர்களுக்கு - ரூ.8,000 |
| 100 நபர்களுக்கு - ரூ.4,000 | 300 நபர்களுக்கு - ரூ.12,000 |

**Rtn. நெல்லை பாலு,**
நிறுவனர், மதுரையின் அட்சயப் பாத்திரம்,
G-102, சாந்தி சதன் குடியிருப்பு கோச்சடை, மதுரை-16
9442630815 (G-Pay)

**Account Details:**
MADURAIYIN ATCHAYA PAATHIRAM TRUST
Canara Bank - Madurai West Avani Moola Street
A/C No:110031396472
IFSC CODE : CNRB0001010 , MICR CODE : 625015006

பணம் அனுப்ப G Pay PhonePe No. 9442630815









தரிசிக்க வாருங்கள்
தினமும் காலை 7.00 - 9.00
மாலை 6.00 - 8.00 மணி

## ஸ்ரீ மஹா பெரியவா கோயில்

13, பொன்மேனி நாராயணன் ரோடு, S.S.காலனி, மதுரை.

ஒவ்வொரு வியாழக்கிழமையும் மாலை 6 மணிக்கு குருவார சிறப்பு பூஜை நடைபெறும்.
பங்கேற்பவர்களுக்கு ஸ்படிக மாலை பிரசாதமாக வழங்கப்படும்

Rtn. நெல்லை பாலு, நிறுவனர் அனுஷத்தின் அனுக்கிரகம், செல் : 94426 30815

aanmeegamalar.com